அ.வ.எண்: 12/2025 நாள்: 03.03.2026

வா.சா.2 – சீனிவாசன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. நான் தாவா வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை வாதி தான் கூறியது என்றால் எனக்கும் தெரியும்,எனது அனுபவத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்து அவர் அனுபவத்தில் உள்ளது அதனால் பட்டா மற்றும் ஆவணங்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவாசொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 12/14 ஆகும். அதன் விஸ்தீரணம் 28 செண்ட் ஆகும். தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

2. வருவாய் கணக்குகளில் தாவா சொத்து அரசு புஞ்சை கைப்பற்றுதல் இல்லாத தரிசு என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி

தாவாசொத்தின் வகைப்பாடு குறித்து எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் சமீபகாலமாக தான் தெரிய வந்தது. தாவா சொத்து சம்பந்தமாக பட்டா மாற்றம் செய்வதற்கு வாதி ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்தாரா என்றால் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார். என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிக்கு கிரைய பாத்தியமா அல்லது அனுபவ பாத்தியமா என்றால் கிரைய பாத்தியம் ஆகும். மேற்படி கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்தது இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக வாதி வட்டாட்சியர் அல்லது கோட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்து அதில் ஏதேனும் உத்தரவு ஏற்பட்ட விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

3. தாவா சொத்து சம்பந்தமாக வாதி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மனுக்களின் மீது உரிய விசாரணை செய்யப்பட்டு தாவா சொத்து அரசு புஞ்சை கைப்பற்றுதல் இல்லாத நிலமாக உள்ளது என்பதால் மேற்படி மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றும் வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும்

சொன்னாள் சரியல்ல. தாவா சொத்து தற்போது அரசு புஞ்சை கைப்பற்றுதல் இல்லாத நிலமாக இருப்பதால் தாவா சொத்து சம்பந்தமாக எந்த பரிகாரமும் பாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.03 16:09:26 +0530